செ.வெ.எண்: 02 நாள்: 01.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தீ விபத்து ஏற்பட்ட பகுதிகளில் தீ மேலும் பரவாமல் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் கறம்பக்குடி வட்டங்களில் தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் கறம்பக்குடி வட்டங்களில் இன்று (01.07.2016) திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதில் ஆலங்குடி வட்டம் எம்.ராசியமங்கலம் கிராமத்தில் சாகுல்ஹமீது என்பவருக்கு சொந்தமான தென்னை நார் துகள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு சேதம் அடைந்த சேமிப்பு கிடங்கு இடத்தையும், கறம்பக்குடி வட்டம், முள்ளங்குறிச்சி ஊராட்சி, செட்டிவிடுதியில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வீடு, தைல மரக்காடுகள், தென்னந்தோப்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன் அப்பகுதியில் தீயணைப்பு துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தீயை அணைக்கும் பணியையும் பார்வையிடப்பட்டது.





புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், முள்ளங்குறிச்சி ஊராட்சி, செட்டிவிடுதியில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வீடு, தைல மரக்காடுகள், தென்னந்தோப்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் புதுக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.ஆர்.கார்த்திக்தொண்டமான், ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.தமிழ்ச்செல்வி சரவணக்குமார், உள்ளனர்.

இந்த ஆய்வில் தீ மேலும் பரவாமல் தடுக்கும் வகையில் அதிகளவு தீயணைப்பு வண்டிகளின் மூலம் தீயினை அணைத்து தீ பரவுவதை கட்டுக்குள் கொண்டுவர தீயணைப்பு வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் தீயினால் பாதிக்கப்பட்ட வீடு மற்றும் பிற பாதிப்புகள் குறித்து உரிய முறையில் கணக்கெடுத்து அதன் விபரத்தை சமர்ப்பிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது புதுக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.ஆர்.கார்த்திக்தொண்டமான், வட்டாட்சியர் திரு.யோகேஸ்வரன், ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.தமிழ்ச்செல்வி சரவணக்குமார், வருவாய் ஆய்வாளர் திரு.முகம்மது இஸ்மாயில், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**